தினகரன்
ஜூலை 16, 2025 புதன்கிழமை

## மூளைச்சாவு அடைந்த மாணவி

# ஜிப்மரில் உடல் உறுப்புகள் தானம்

### அரசு சார்பில் மரியாதை



ஜிப்மரில் உடல் உறுப்பு தானம் செய்த மாணவியின் உடலுக்கு புதுச்சேரி அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

புதுச்சேரி, ஜூலை 16: புதுச்சேரி பிரியதர்ஷினி நகரில் வசித்து வருபவர் ராஜேஸ்வரி அகோரம். கேரளாவை பூர்வீகமாக கொண்டவர். இவர் ஜிப்மரில் டாக்டராக பணியாற்றி வருகிறார். இவரது மகள் இலாநிஷாத் 10ம் வகுப்பு படித்து வந்தார். இவர் சில தினங்களுக்கு முன்பு நீச்சல் அடிக்கும் போது தலையில் காயம் ஏற்பட்டு ஜிப்மரில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் மூளைச்சாவு அடைந்தார். அவரது உடல் உறுப்புகளை தானம் செய்வதற்கு பெற்றோர் சம்மதித்தனர். இதையடுத்து, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று, உடல் உறுப்புகளை தானம் செய்யப்பட்ட மாணவியின் உடலுக்கு புதுச்சேரி அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். மேலும் ஜிப்மர் மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.